**13.3.2015**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மண் வளத்தைப் பாதுகாக்க வலியுறுத்தி விழிப்புணர்வுப் பேரணி**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், மேட்டுப்பாளையம், வாலிகண்டபுரம் மற்றும் எறையூரில் உள்ள பள்ளிகளில் மண் வளத்தை பாதுகாக்க வலியுறுத்தி இந்தோ அறக்கட்டளை மற்றும் சென்னை சி.பி.ஆர். பவுண்டேசன் சார்பில் விழிப்புணர்வுப் பேரணி புதன்கிழமை நடைபெற்றது. மேட்டுப்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் 100க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் உள்பட பள்ளி உதவி தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதேபோல, எறையூர் நேரு நடுநிலைப்பள்ளி மற்றும் வாலிகண்டபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்தோ அறக்கட்டளையைச் சேர்ந்த சுதா, கலைச்செல்வி, ஜெகதீசன் ஆகியோர் மனிதர்களின் செயல்பாடுகள், காலநிலை மாற்றங்களால் வறண்ட நிலங்கள் தாவரங்கள் இல்லாத தரிசு நிலங்களாக மாறிவருவது குறித்து விளக்கிப் பேசினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தோட்டக்கலை பயிர் சாகுபடி பயிற்சி**

வாலாஜாபாத்: தோட்டக்கலை பயிரிடும் விவசாயிகளுக்கு, பயிற்சி முகாம் நேற்று நடந்தது. வாலாஜாபாத் வட்டார வேளாண் விரிவாக்க

மையத்தில், நேற்று நடந்த பயிற்சி முகாமிற்கு, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அனிலா கிங்ஸ்லி தலைமை தாங்கினார். வாலாஜா பாத் வட்டார வேளாண் உதவி இயக்குனர், லதா பானுமதி முன்னிலை வகித்தார். இம்முகாமில், காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் வேல்முருகன் கலந்து கொண்டு, காய்கனி சாகுபடி தொழில்நுட்பம்; குழித்தட்டு நாற்றங்கால் முறை; சொட்டு நீர்ப்பாசனம்; நிலப்போர்வை காய்கனி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து, ஆலோசனை வழங்கினார். முகாமில், புத்தகரம் மற்றும் புளியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த, 43 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>எமரால்டு பகுதியில் காரட் விவசாயம் ஜரூர்</u>

மஞ்சூர் : எமரால்டு பகுதியில் காரட் விவசாயம் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. மஞ்சூர் அடுத்துள்ள எமரால்டு சுற்றுவட்டார பகுதிகளான எமரால்டு, லாரன்ஸ், கோத்தக்கண்டி மட்டம், இந்திராநகர், அண்ணாநகர், காந்திகண்டி, போர்த்திஹாடா, இத்தலார், பேலிதளா பகுதிகளில் மலை காய்கறி விவசாயம் அதிகளவில் பயிரிடுகின்றனர். இந்த பகுதிகளில், தற்போது,300 ஏக்கர் அளவுக்கு காரட் பயிரிட்டுள்ளனர். இன்னும் ஒன்றரை மாதங்களில் அறுவடைக்கு தயாராகுவதால், காரட் பயிர்களை விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

## <u>வேளாண்மை கடனுதவி</u>

ஊட்டி : தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களில், கடன் வழங்கும் நிகழ்ச்சிகள் நடந்தன. ஸ்ரீகரியபெட்டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், நான்கு சுய உதவிக் குழுக்களுக்கு, 20 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், சங்க தலைவர் கண்ணன், மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனர் சர்மிளா, மத்திய வங்கி மேற்பார்வை யாளர் சிவக்குமார், சங்க செயலர் மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

எம்.பாலாடாவில் உள்ள ஸ்ரீரங்கநாதர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கு, 23 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது. சங்க தலைவர் பீமன், செயலர் ஸ்ரீராம் உட்பட பலர் பங்கேற்றனர். ஈதேஸ்வரா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், நடந்த வைப்பு தொகை சேமிப்பு முகாமில், 8 லட்சம் ரூபாய் வரை வைப்புத் தொகை சேகரிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட விவசாயி களுக்கு, 15 லட்சம் ரூபாய் கடன் வழங்கப்பட்டது. சங்க தலைவர் முருகன், மத்திய வங்கி மேற்பார்வையாளர் சிவக்குமார், சங்க செயலர் மோகன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில்ரூ.1.89 லட்சத்துக்கு பருத்தி ஏலம்</u>**

திருச்சி:துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், 4.2 டன் பருத்தி, 1.89 லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது.இது குறித்து கலெக்டர் பழனிச்சாமி கூறியதாவது: திருச்சி மாவட்டத்தில் மானாவாரி பயிராக பருத்தியை, 16,450 ஹெக்டேரில் விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். பருத்தி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க, துறையூரில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக ஏலம், கடந்த ஓராண்டாக நடத்தப்பட்டு வருகிறது.கடந்த, 11ம் தேதி நடந்த ஏலத்தில், கோட்டாத்தூர், புலிவளம், மேலகுண்ணுப்பட்டி, கீழகுண்ணுப்பட்டி, தண்டலைபுத்தூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த, 33 விவசாயிகள் அறுவடை செய்த, 160 அட்டி பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். நாமக்கல், பெரம்பலூர், துறையூர், எதுமலை ஆகிய பகுதிகளை சேர்ந்த, எட்டு வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒரு கிலோ பருத்தி அதிகபட்சமாக, 40.50 ரூபாய்க்கும், மொத்தம், 4,924 கிலோ பருத்தி, ஒரு லட்சத்து, 89 ஆயிரத்து, 331 ரூபாய்க்கு விற்பனையானது. வரும், 18ம் தேதி ஏலத்திற்கு, துறையூர், உப்பிலியாபுரம், தா.பேட்டை, முசிறி,

மண்ணச்சநல்லூர் வட்டாரங்களில் பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள், விற்பனைக்கு கொண்டு வந்து விற்று பயனடையவும், என்று அவர் தெரிவித்தார்.

## வேளாண்மை பட்டய படிப்பு பட்டமளிப்பு விழா

திண்டிவனம்: திண்டிவனம் அடுத்த எறையானூர் சி.சுப்ரமணியம் வேளாண்மை பட்டயப்படிப்பு நிலையத்தில் மூன்றாவது பட்டய விழா நடந்தது. சி.சுப்ரமணியம் வேளாண்மை பட்டயப்படிப்பு நிலைய முதல்வர் வைத்தியநாதன் தலைமை தாங்கினார். பேராசிரியர் ராமசுப்ரமணியன் வரவேற்றார். திருவண்ணாமலை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய தனி அலுவலர் பிரசாத் சிறப்புரையாற் றினார். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜேந்திரன், சி. ராமசாமி அறக்கட்டளையின்பேரில், விஜய், தேவி, கலைவாணி, மோகனகிருஷ்ணன் ஆகியோருக்கு சிறந்த மாணவர்களுக்கான தங்கப்பதக் கங்கள் மற்றும் 161 மாணவர்களுக்கு பட்டய சான்றிதழ் வழங்கினார். திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சங்கீதா பணிக்கர் நன்றி கூறினார்.

## விவசாயிகள் சங்கமேலாண்மைக்குழு

கரூர்:பள்ளபாளையம் வாய்க்கால் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் மேலாண்மைக்குழு கூட்டம், சங்க அலுவலகத்தில் நடந்தது.கூட்டத்துக்கு சங்க தலைவர் பழனிசாமி, தலைமை வகித்தார். கூட்டத்தில், முதன்மை வாய்க்காலில் இருந்து மதகு வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்காலில் சிமென்ட் பலகை அமைத்து, கடைமடை வரை தண்ணீர் கிடைக்க செய்ய வேண்டும். மத்திய அரசின், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை, விவசாயிகள் பயன்பெறும் வகையில், மாற்றி அமைக்க வேண்டும். ஆண்டாங்கோவில், கருப்பம்பாளையம் ஆகியவற்றுக்கு இடையில் கட்டும் தடுப்பணையை விரைவில் கட்டித்தர வேண்டும், உள்ளிட்ட

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கூட்டத்தில், விவசாய சங்க நிர்வாகி கள் சாமிநாதன், ஆசைத்தம்பி, கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## 14 டன் சின்ன வெங்காயம்ரூ.1.82 லட்சத்துக்கு ஏலம்

பெரம்பலூர்:செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நடைபெற்ற திறந்த முறை ஏலத்தில், துறையூர், உப்பிலியபுரம், சத்திரமனை, அம்மா பாளையம், இரூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சீதேவிமங்கலம், பொம்மனப்பாடி ஆகிய கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். இதில், புதுச்சேரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மண்ணச்சநல்லூர், லாடபுரம், குரூர், சீதேவிமங்கலம், சத்திரமனை, பொம்மனப்பாடி, தேனூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த,11 வியாபாரிகள் பங்கேற்று, 213 மூட்டை (14,127 கிலோ) சின்ன வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். புதிய வெங்காயம் ஒரு கிலோ அதிகபட்சம், 19.50 ரூபாய்க்கும், விதை வெங்காயம் அதிகபட்சமாக,18 ரூபாய்க்கும் விற்பனையானது.

## களைகளை கட்டுப்படுத்த நிலப்போர்வை வேளாண் பயிற்சியில் தகவல்

காரைக்குடி : களைகளை கட்டுப்படுத்தி ஆவியாதலை குறைக்க நிலப்போர்வை முறையை, குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் அறிமுகம் செய்துள்ளனர். குன்றக்குடியில் நவீன தொழில் நுட்பத்தில் பயிரிடும் முறை குறித்த பயிற்சி நடந்தது. சாக்கோட்டை, கல்லல், திருப்பத்தூர் ஒன்றியங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். உதவி இயக்குனர் (தோட்டக்கலை) அழகுமலை பேசுகையில், நவீன தொழில் நுட்பத்தில் தோட்டக்கலை பயிர்களை பயிரிடுவதன் மூலம், நான்கு மடங்கு லாபம் பெறலாம். எக்டேருக்கு 100 மாங்கன்றுக்கு பதில், 5 மீட்டர் இடைவெளி விட்டு 400 கன்றுகளை நடலாம். இதன் மூலம் விளைச்சல் 20லிருந்து 60 டன்னாக உயரும். ஆகஸ்ட், செப்டம்பரில் மர

கிளையை வெட்டி கவாத்து செய்ய வேண்டும். சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிக்கு 100; பெரிய விவசாயிக்கு 75 சதவீதம் மானியம் வழங்கப்படும். கொய்யா கன்றினை 3 மீட்டர் நீளம், 2 மீட்டர் அகல இடைவெளியில் வைக்க வேண்டும். இதனால் எக்டேருக்கு 275க்கு பதில் 1,660 மரக்கன்றுகள் வைக்கலாம். குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் களைகளை கட்டுப்படுத்தி, நீர் ஆவியாதலை தடுக்கும் வகையில், நிலப்போர்வையை அறிமுகம் செய்துள்ளனர். இவை அமைக்க எக்டேருக்கு ரூ.12 ஆயிரம் மானியமாக தரப்படும். வெயில்காலங்களில் நீரின் தேவையை கருத்தில் கொண்டு, விவசாயிகள் நிலப்போர்வை அமைக்கலாம், என்றார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை : சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் மார்ச் 27 அன்று காலை 10 மணிக்கு, விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடக்கும். இதில் விவசாயிகள், பொதுமக்கள் பங்கேற்று துறை சார்ந்த புகாரினை தெரிவிக்கலாம்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## ரூ48 லட்சத்தில் புதிய கால்நடை மருந்தகம்

நாமக்கல், : கால் நடை பராமரிப்புத்துறை சார்பில் நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீரம்பூர் மற்றும் தளிகை ஊராட்சிகளில் புதிய கால் நடை மருந்தகம் கட்டும் பணி யின் துவக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் தொழில் துறை அமைச்சர் தங்கமணி பங்கேற்று நபார்டு திட்டத்தின் கீழ், தலா ரூ24 லட்சத்தில் புதிய கால்நடை மருந்தக கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை பூமிபூஜை செய்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சி யில் கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் சக்திவேல், உதவி

செயற்பொறியாளர் முரு கேசன், ஊராட்சி மன்றத்தலைவர்கள் கோபி, நடராஜன்உள்ளிட்டோர்பங்கேற்றனர்.

**<u>கால்நடை பல்கலைகழக ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி, ஆடு வளர்ப்பு குறித்த பசுந்தீவன பயிற்சி</u>**

தர்மபுரி, :கால்நடை பல்கலைகழக பயிற்சி மற் றும் ஆராய்ச்சி 0434மைய த்தில் வரும் 18 மற்றும் 19ம் தேதிகளில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் ஆடுவளர்ப்பு பசுந்தீவன பயிற்சி நடக்கிறது.தர்மபுரி கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் செந்தில் வேல் விடுத்துள்ள செய்தி: தர்மபுரி மாவட்டம் குண்டல்பட்டியில் தமிழ் நாடு கால்நடை மருத் துவ அறிவியல் பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் 18ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் மூலிகை மருத்துவ பயிற்சி நடக்கிறது. இதில் இறைச்சி கோழி வளர்ப்பிற்கான பண்ணை வீடு அமைத்தல், தீவன மேலாண்மை, குடிநீர் சுகா தாரம், உயிர் பாதுகாப்பு மற்றும் நோய் தடுப்பு முறை கள், விற்பனை வசதிகள் மற்றும் கோழிகளுக்கான மூலிகை மருத்துவம் குறித்த ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.இதே போல் வரும் 19ம் தேதி ஆடு வளர்ப்பு பசுந்தீவன உற்பத்தி என்ற பயி ற்சி நடக்க உள்ளது. இதில் வணிக ரீதியாக வெள்ளா ட்டு பண்ணை அமைக்க ஆடுகளை தேர்வு செய்யும் முறைகள், கொட்டகை அமைத்தல், பசுந்தீவன உற்பத்தி, அடர்தீவனம் அளித்தல், இளம் குட்டிகள் பராமரிப்பு, பண்ணை பராமரிப்பு, இனபெருக்க முறைகள், பண்ணை பொருளாதாரம் மற்றும் காப்பீடு வசதிகள் குறித்து பயிற்சி நடக்கிறது.இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஆராய்ச்சி மைய த்தை நேரிலோ அல்லது 04342-288420 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>ஆடுகளுக்கு நோய் தடுப்பு சிகிச்சை கால்நடை துறை ஏற்பாடு</u>**

பெ.நா.பாளையம், : கோவை துடியலூர் அருகே உள்ள மடத்தூர்,

மடத்தூர்புதூர் ஆகிய பகுதியிலுள்ள வீடுகளில் வளர்த்துவந்த 50 ஆடுகள் மர்ம நோய் தாக்கி இறந்தது. இது பற்றிய செய்தி கடந்த 9ம் தேதி திங்கட்கிழமை தினகரனில் வெளிவந்தது. இந்த செய்தியை தொடர்ந்து கால்நடை பராமரிப்புத்துறை மண்டல துணைஇயக்குனர் தமிழ்ச்செல்வின் உத்தரவின் பேரில் மாவட்ட உதவிஇயக்குனர்கள், கிருஷ்ணசாமி, பழனிசாமி, மருத்துவ அதிகாரிகள் தாமோதரன், செந்தில்குமார், டாக்டர் சாம்ரிச்சர்டு, ஆய்வாளர்கள் வனிதா, சதீஷ் ஆகியோர் கொண்ட குழுவினர் நோய் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். கடந்த மூன்று நாட்களாக சுமார் 200 ஆடுகளுக்கு ஊசி மற்றும் மருந்து கொடுத்துள்ளனர். நஞ்சுண்டாபுரம் ஊராட்சி தலைவர் சுந்தரராஜன், துணை தலைவர் திருநாவுக்கரசு, கவுன்சிலர்கள் சசிக்குமார், குமாரசாமி ஆகியோர் கொண்ட குழுவினர் மருத்துவர்களுடன் இணைந்து நோய் வராமல் ஆடுகளை பராமரிப்பது குறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடம் பிரசாரம் மூலம் ஏற்படுத்தி வருகின்றனர். இதுகுறித்து மடத்தூர் கால்நடை மருத்துவர் சாம்ரிச்சர்டு கூறுகையில், 'மற்ற ஆடுகளுக்கும் நோய் பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது. சளி, வயிற்றுபோக்கு ஏற்பட்டால் உடனடியாக ஆடுகளை கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு வர வேண்டும். தொடர்ந்து நான்கு நாட்கள் கண்காணித்து சிகிச்சை பெற வேண்டும். ஆடுகள் கட்டியிருக்கும் இடத்தை சுத்தமாகவும், சூரிய வெளிச்சம் படுமாறும் வைத்துக் கொள்ள வேண்டும்' என்றார்.

## பூத்து குலுங்கும் காபி செடிகள்

பந்தலூர், : பந்தலூர்- கூடலூர் மற்றும் கேரளா மாநிலம் வயநாடு பகுதிகளில் பல ஆயிரக்கணக் கான ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் காபி விவ சாயம் செய்து வருகின்றனர். காபி கொட்டை கிலோ ஒன்றிற்கு 60 முதல் 70 வரை விலை கிடைப்பதால் விவசாயிகள் காபி விவசாயத்தில் முழு ஈடுபாடுடன் செயல் பட்டு வருகின்றனர். கடந்த சில தினங்களுக்கு

முன் கோடை மழை பெய்ததால் காபி செடிகள் பூத்து குலுங்குகின்றன. இது காண்போர் கண்ணை கவரும் விதமாக அமைந்துள்ளது.சுற்றுலா பயணிகள் காபி தோட்டப் பகுதிகளில் நின்று ரசித்தும் புகைப்படம் எடுத்தும் செல்கின்றனர். ஓரளவு ஈரப்பதம் இருந்தால் காபி பூக்கள் உதிராமல் நல்ல மகசூல் கிடைக்குமென விவசாயிகள் கூறுகின்றனர்.

## 29 பயனாளிகளுக்கு ரூ.8.70 லட்சத்தில் கறவை மாட்டுக்கடன்

பொன்னமராவதி, : பொன்னமராவதி அருகே உள்ள திருக்களம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் 29 பயனாளிகளுக்கு கறவை மாட்டுக்கடன் வழங்கப்பட்டது. மத்திய காலக்கடன் ரூ.8.70 லட்சம் 29 நபர்களுக்கு சங்கத்தலைவர் ராசமாணிக்கம் கறவை மாட்டுக்கடன் வழங்கினார். இதில் கிளை மேலாளர் ராஜேந்திரன், செயலர் துரையரசன், பணியாளர்கள் செல் வராஜ், பெருமாள் உட்பட பலர்கலந்துகொண்டனர்.

## குறைந்த அளவு நீரை பயன்படுத்தி மக்காச்சோளம் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்

அறந்தாங்கி, : அறந்தாங்கி வேளாண் வட்டாரத்தில் குறைந்த அளவு நீரை பயன்படுத்தி மக்காச்சோளம் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குனர் பொன்னையா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அறந்தாங்கி வேளாண் வட்டாரத்தில் உள்ள அனைத்து கண்மாய்களிலும் தற்போது குறைவான அளவே நீர் இருப்பு உள்ளது. எனவே விவசாயிகள் குறைந்த அளவு நீரினை பயன்படுத்தி வீரிய ரக மக்காச்சோள பயிரினை சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெற்று அதிக வருமானம் பெறலாம். மக்காச்சோளம் சாகுபடி செய்வதற்கு நிலத்தை முதலில் டிராக்டர் மூலம் சட்டி கலப்பை கொண்டு ஒரு முறை உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது 5 டன் தொழு உரம் இட்டு அதனுடன் 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம் கலந்து பரப்பி நன்கு உழவு

செய்யவேண்டும். தண்டு துளைப்பானை கட்டுப்படுத்த ஒரு விதைக்கு 4 மிலி இமிடாகுளோபரிடு மருந்து, 4 மிலி 0.5 கிராம் கோந்து மற்றும் 20 மிலி தண்ணீர் என்ற விகிதத்திலும் அடிச்சாம்பல் நோயை கட்டுப்படுத்த மெட்டலாக்சில் அல்லது இதரம் 2 கிராம் அல்லது 2 கிலோ என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும். பின்பு 200 கிராம் அசோஸ்பைரில்லம் (இதரம்) மற்றும் 200 கிராம் பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரங்களை ஒரு ஏக்கருக்கான விதையுடன் ஆரிய அரிசிக் கஞ்சியில் கலந்து நிழலில் உலரவைத்து விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு வீரிய ஒட்டு மக்காச்சோள விதைகள் 8 கிலோ தேவைப் படுகிறது. விதை நேர்த்தி செய்த விதைகளை வரிசைக்கு வரிசை 60 செ.மீ. செடிக்கு செடி 25 செ.மீ. இடைவெளியில் 3 முதல் 5 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். பயிர் எண்ணிக்கை ஒரு ச.மீயில் 7 செடிகள் இருக்கவேண்டும். மானாவாரியில் பார்களின் கீழ் ஓரத்திலும், நீர் தேங்குமா னால் பார்களின் உச்சியிலும் விதைக்க வேண்டும். மக்காச்சோள பயிரினை 60 செ.மீ., 25 செ.மீ. இடைவெளியில் விதைப்பு செய்வதன் மூலம் வாளிப்பான கதிர்களையும் மணிகளையும் பெறமுடி யும். மண் பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி, சாம்பல் சத்துக்களை இடவேண்டும். பொதுப்பரிந்துரையான தழைச்சத்து 60 கிலோ (யூரியா 128 கிலோ), மணிசத்து 30 கிலோ (சூப்பர் பாஸ்பேட் 187 கிலோ) சாம்பல்சத்து 30 கிலோ (பொட்டாஷ் 50 கிலோ) இடவேண்டும். இந்த உரங்களில் தழைச்சத்தில் பாதியும், மணிசத்து முழுவதையும் அடியுரமாகவே இடவேண்டும். விதைத்த 3ம் நாள் அட்ரசின் மருந்தினை ஏக்கருக்கு 500 மிலி கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவேண்டும். 2 முதல் 4 டி அல்லது 100 கிலோ மணலுடன் கலந்து தூவலாம். களைக்கொல்லியை வயலில் ஈரம் இருக்கும் போது தெளிக்கவேண்டும். பிறகு விதைத்த 30ம் நாள் கைக்களை எடுக்கவேண்டும். ஊடுபயிர் செய்வதால் மண் வளம் அதிகரித்து களை, பூச்சி நோய்

தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதோடு கூடுதல் வருமானமும் கிடைக்கிறது. பயிர் அறுவடை காலம் நெருங்கும் போது கதிர் மேலுள்ள உளை காய்ந்த காணப்படும். செடியின் பச்சை நிறம் குறைந்து தண்டு இலைகள் காய்ந்து தோற்றமளிக்கும். தற்பொழுது ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ.1200க்கு விற்பனை செய்யப்படுவதால் ஒரு ஏக்கருக்கு சராசரியாக 3,000 கிலோ தானிய மகசூல் கிடைத்தாலும் 3 மாதத்தில் 33,000 வருமானம் கிடைக்கும். இதில் சாகுபடி செலவு ரூ.15,000 போக நிகர லாபமாக ஏக்கருக்கு ரூ.18,000 வரை பெற முடியும். எனவே அறந்தாங்கி வட்டார விவசாயிகள் அனைவரும் மக்காச்சோளம் பயிரை சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**<u>சிறப்பான வாழ்வு பெற சிறுதானிய உணவு அவசியம் வேளாண் அதிகாரி அறிவுறுத்தல்</u>**

அன்னவாசல், : குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பாக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் சிறுதானியப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் சாகுபடித் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி கிள்ளுக்கோட்டைப் பகுதியில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியை தலைமை வகித்து துவக்கி வைத்த வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் பேசு கையில், விவசாயிகள் நீர் மிகவும் தேவைப்படும் நெல், கரும்பு போன்ற பயிர் களை க் குறைத்துக்கொண்டு நீர்த் தேவை குறைவாகத் தேவை ப்படும் சிறுதானியங் கள் மற்றும் குறுந்தானியங்களைப் பயிர் செய்யவேண் டும். சிறுதானியங் களுக்குத் தற்போது சந்தை யில் நல்ல விலை கிடைத்து வருவதால் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறலாம் என்றார். மேலும், சிறுதானியப் பயிர்களுக் கான அரசு செயல்படுத்தும் திட்டங் களையும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள விவசாயிகளைக் கேட்டுக்கொண்டார். இப்பயிற்சியில் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் முன்னிலை வகித்துப் பேசுகையில், சிறுதானியங்கள் மற்றும் குறுந்தானியங்களான சோளம், கேழ்வரகு,

கம்பு, தினை, சாமை, வரகு ஆகியவற்றை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதால் ஏற்படும் நன்மைகளை விளக்கினார். குன்றாண்டார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் சங்கரலட்சுமி, மத்திய மற் றும் மாநிலத் திட்டங்கள் குறித்தும் சிறுதானியப் பயிர்களுக்கு வழங்கப்படும் மானிய விவரங்கள் குறித் தும் பயிற்சியாளர்களுக்கு எடுத்துக் கூறினார். பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு உசிலம்பட்டி வேளாண் அறிவியல் நிலையத் தொழில்நுட்ப வல்லுநர்கள் செந்தில்குமார், சுந் தரவேல்ராஜன் ஆகியோர் சிறுதானியப் பயிர்களின் சாகுபடித் தொழில்நுட்பங்களையும் பூச்சி, நோய் மேலாண்மை குறித்தும் விரி வாகப் பயிற்சி அளித்தார். இப்கோ கூட்டுறவு உர நிறுவனத்தின் விற்பனை மேலா ளர் பொம்மணன் சிறுதானியப் பயிர்களுக்கான உர மேலாண்மை மற்றும் உரங்களின் பயன்பாடு குறித்தும் எடுத்துக் கூறினார். நீர்வள நிலவளத் திட்டத்தில் முழு மானிய விலையில் முன்னோடி விவசாயி அந்தோணி லாரன்ஸ் தலைமையில் கிள்ளுக்கோட்டை பிரபா சிறுதானிய உற்பத்தியாளர் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள சிறுதானியங்களை மதிப்பு கூட்டும் இயந்திரம் வேளாண் இணை இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டதோடு பயிற்சியாளர்களுக்கும் இக்கருவியின் பயன்பாடு குறித்து நேரடியாகக் காண்பிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு சிறுதானியங்களின் பயன்பாடு குறி த்து விழிப்புணர்வு ஏற்படுத் தும் பொருட்டு சிறுதானிய உணவுகள் தயார் செய்து வழங்கப்பட்டன. பயிற்சி யின் நிறைவில் உழவர் பயி ற்சி நிலைய வேளாண் அலு வலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

**<u>பட்டுக்கோட்டையில் இன்று விவசாயிகள் கருத்துக் கேட்பு கூட்டம் ஆர்டிஓ அழைப்பு</u>**

பட்டுக்கோட்டை,: பட்டுக்கோட்டையில் இன்று கோட்ட அள விலான மாதாந்திர விவசாயிகள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து ஆர்டிஓ அரங்கநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: பட்டுக்கோட்டை கோட்ட அளவி லான மாதாந்திர விவசாயிகள் கருத்துக் கேட்பு கூட் டம் இன்று காலை 11.00 மணியளவில்

வருவாய் கோ ட்டாட்சியர் அலுவலகத் தில் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டங்களை சேர்ந்த அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறி தீர்வு பெறலாம். மேலும் இந்த கூட்டத்தில் அனைத்துத் துறை அதிகாரிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில்கூறப்பட்டுள்ளது.

**<u>தென்னையில் தஞ்சை வாடல்: கட்டுப்படுத்தும் வழிமுறைகள் வேளாண் அதிகாரி வழிகாட்டல்</u>**

சேதுபாவாசத்திரம், : தென்னையை தாக்கும் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கம் அளித்துள்ளார். இது குறித்த்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:தென்னையை தாக்கும் நோய்களில் தஞ்சை வாடல்நோய் மற்றும் குறுத்தழுகல் நோய் மிக முக்கியமானதாகும். தஞ்சை வாடல் நோயானது தென்னையின் தண்டுப்பகுதியின் அடிப்பாகத்தில் பழுப்பும், சிவப்பும் கலந்த சாறு வடியும் மற்றும் வாடல்நோய் தாக்கப்பட்ட மரத்தின் அடிமட்டைகள் பழுப்பு நிறம் அடைந்து காய்ந்து தொங்கும். பிறகு நாளடைவில் மரத்தின் மட்டைகள் கீழே விழுந்து மரம் மொட்டையாக மாறும். இதனை கட்டுப்படுத்திட வறட்சி காலத்தில் அடிக்கடி தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நோய் தாக்கிய மரம் ஒன்றிற்கு பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களுடன் 50 கிலோ தொழுஉரம் மற்றும் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து இடவேண்டும். வாழையை ஊடுபயிராக சாகுபடி செய்வதன் மூலம் இந்நோயின் தாக்குதலை குறைக்க முடியும். டிரைக்கோடெர்மா ஹார்சியானம் என்ற உயிர் பூசானத்தை 50 கிலோ மக்கிய தொழு எருவுடன் கலந்து மரத்தை சுற்றி 3 அடி தூரத்தில் வைத்து இந்நோயை கட்டுப்படுத்தலாம். பாஸ்போபாக்டீரியா என்ற நுண்ணுயிர் 200

கிராமுடன் (1 பாக்கெட்) 10 கிலோ தொழுஉரம் கலந்து இடுவதன்மூலம் இந்நோயின் பாதிப்பை குறைக்கலாம். நோய் தாக்கிய ஒவ்வொரு மரத்திற்கும் 40 லிட்டர் வீதம் 1 சத போர்டோ கலவையை (400 கிராம் மயில்துத்தத்தை 20 லிட்டர் நீரிலும், 400 கிராம் நீர்த்த சுண்ணாம்பை 20 லிட்டர் நீரிலும் கரைத்த கலவை) மரத்தை சுற்றி 1.8 மீட்டர் வட்ட பாத்தியில் மண் நன்றாக நனையுமாறு ஊற்றினால் நோய் பூஞ்சானத்தை அழிக்கலாம். இந்நோயை கட்டுப்படுத்திட ஆரியோபஞ்சின்சால் 2 கிராம், தாமிரசல்பேட் 1 கிராம் ஆகியனவற்றை 100 மில்லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்தவேண்டும். வேரூட்டம் செய்ய பென்சில் அளவு தடிமன் உள்ள புதிய இளஞ்சிவப்பு வேரினை கூரிய கத்தியால் சாய்வாக வெட்டி மேற்படி கரைசலில் உள்ள பாலிதீன் பையில் நுழைத்து கட்டி வைக்கவேண்டும். குருத்தழுகள் நோயை பொறுத்தமட்டில் தென்னங்கன்றுகளிலும் இளம் மரங்களில் மட்டுமே காணப்படும். குருத்தின் பச்சைநிறம் மாறி மஞ்சளாகி பின்னர் அழுகி வாடிவிடும். இதனை கட்டுப்படுத்திட ஒரு கிலோ மயில்துத்தம் மற்றும் 1 கிலோ சுண்ணாம்பு தூளை தனித்தனியே 5 லிட்டர் நீரில் கரைத்து போர்டோ பசையை தயாரிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குருத்து பகுதியில் இந்த பசையை தடவி மழைநீர் படாதவாறு பார்த்துக் கொண்டால் இந்நோய் எளிதில் கட்டுப்படும். இவ்வாறு அவர் அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## <u>நடுக்கரையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

செம்பனார்கோவில், : செம்பனார்கோவில் அருகே நடுக்கரை ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் 8வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந் தது. மண்டல இணை இயக்குனர் நாகராஜன் முகாமை தொடங்கி வைத்தார். மண் டல துணை இயக்குனர் கே.நாகராஜன் முன்னிலை வகித்தார். கால்நடை மருத்துவர் அன்பரசன், ஆய்வா ளர் உமாமகேஸ்வரி ஆகி யோர் கொண்ட மருத் துவ குழுவினர்

302 கால்நடை களை பரிசோதனை செய்து தடுப்பூசி போட்டனர். இதில் மயிலாடுதுறை கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் தமிழ்செல்வம், ஊராட்சி மன்றத் தலைவி சித்ரா பங்கேற்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஈரோடு சந்தையில் சிந்து இன பசுமாடு ரூ.40ஆயிரத்துக்கு விற்பனை</u>**



ஈரோடு, ஈரோடு கருங்கல்பாளையத்தில் உள்ள மாட்டுச்சந்தை வாரம்தோறும் வியாழக்கிழமை நடைபெறும். அதற்காக விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் புதன்கிழமை இரவே தங்களது மாடுகளை சந்தைக்கு கொண்டு வரத்தொடங்கிவிடுவார்கள். சேலம், கோவை, திருப்பூர், கரூர், நாமக்கல் போன்ற மாவட்டங்களில் இருந்து அதிக அளவிலான மாடுகளை விற்பனைக்கு கொண்டு வருவார்கள். நேற்று சந்தைக்கு 500 பசுமாடுகள், 400 எருமை மாடுகள் என மொத்தம் 900 மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் கருப்பு-வெள்ளை பசுமாடு குறைந்தபட்ச விலையாக ரூ.16 ஆயிரத்துக்கும் அதிகபட்ச விலையாக ரூ.35 ஆயிரத்துக்கும் விலை போனது. சிந்து இன பசுமாடு ரூ.18 ஆயிரம் முதல் ரூ.40 ஆயிரம் வரைக்கும், கலப்பின பசுமாடு ரூ.16 ஆயிரம் முதல் ரூ.37 ஆயிரம் வரைக்கும், எருமை மாடு ரூ.18 ஆயிரம் முதல் ரூ.43 ஆயிரம் வரைக்கும் விலை போனது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், மராட்டியம், கேரளா,

ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்தும் வந்திருந்த ஏராளமான விவசாயிகள் மற்றும் வியாபாரிகள், மாடுகளை பிடித்து லாரிகளில் ஏற்றி சென்றனர்.

## <u>தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு சரக்குரெயிலில் 1,070 டன் நெல் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது</u>



தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு சரக்கு ரெயிலில் 1,070 டன் நெல் அரவைக்காகஅனுப்பிவைக்கப்பட்டது.

நெற்களஞ்சியம்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல், தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும். அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிபகழகத்துக்கு சொந்தமான சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுவதோடு, தமிழகத்தில் உள்ள திருவள்ளூர், மதுரை, சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும். இந்த நெல் மூட்டைகள் சரக்கு ரெயில்களிலும், லாரிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

1,070டன்

தற்போது தஞ்சை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட சம்பாசாகுபடி நெல் கொள்முதல் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகள், சேமிப்புக்கிடங்குகளில் இருந்தும், கொள்முதல் நிலையங்களில் இருந்தும் லாரிகளில் ஏற்றப்பட்டு

தஞ்சை ரெயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. இவ்வாறு 105 லாரிகளில் ஏற்றி வரப்பட்ட 1,ஔண070 டன் நெல் மூட்டைகள் சரக்கு ரெயிலில் 28 பெட்டிகளில் ஏற்றப்பட்டு திருவள்ளூருக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.